எம்.சி.ஓ.பி எண்: 4804/2022 தேதி: 23.07.2026

எ,மசா. : 3

பெயர் : பேபி

க /பெ. : பிரபு

வயது : 40

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இரண்டாவது எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 6 வருடமாக வேலை செய்கிறேன். இந்த மனு தாக்கல் செய்தபோது இந்த நிறுவனத்தில் லீகல் டீம்யில் பணியில் இருந்தேன். நான் தற்பொழுது Assistant Manager Legal பணி செய்கிறேன். என்னுடைய பிரமாணாவாக்குமூலத்தில் இரண்டாவது எதிர்மனுதாரர் பெயர் தவறாக தட்டச்சு செய்யப்பட்டு உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அன்று மாலை அதை பற்றி தெரிந்தது. அதை திருத்துவதற்கு மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் தெரிவித்துவிட்டேன். அவர் மனு இன்னும் தாக்கல் செய்யவில்லை. பிரமாணாவாக்குமூலம் தவறானது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இரண்டாவது எதிர்மனுதாரர் எங்கள் நிறுவனம் என்பது இந்த வழக்கில் அழைப்பானை எங்களிடம் கொடுக்கப்பட்டபோது தெரிந்தது. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் பாலீசி எங்கள் நிறுவனம் வழங்கியதா என்றால் இல்லை. நான் பிரமாணாவாக்குமூலம் தாக்கல்செய்ய அருகதை இல்லை என்றால் சரியல்ல. எமசாஆ 8 அறிவிப்பை கொடுக்க எனக்கு உரிமை இல்லை என்றால் என் வழக்கறிஞர் அந்த அறிவிப்பை கொடுத்துள்ளார். எமசாஆ 7ல் எனக்கு வழங்கப்பட்ட அதிகார கடிதம். எனக்கு இந்த வழக்கை பற்றி விவரம் தெரியாது என்றாலும் எனக்கு அதிகார கடிதம் வழங்கியது தவறு என்றாலும் சரியல்ல. விபத்து நடந்த தேதி 02.04.2022 என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. 07.04.2021 முதல் 06.04.2022 இடைப்பட்ட காலத்தில் இந்த தேதி உள்ளது என்றால் சரி. இந்த குறிப்பிட்ட தேதியில் எங்கள் நிறுவனம் பாலீசி வழங்கியுள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் இந்த தேதியில் பாலீசி வழங்கவில்லை. இந்த இடைப்பட்ட காலத்தில் பாலீசி நம்பர் 42615635 உள்ளது என்ற விவரம் எனக்கு தொியும் என்றால் தெரியாது. இந்த பாலீசியை எங்கள் நிறுவனம் HDFC ERGO நிறுவனத்திற்கு மாற்றி உள்ளது என்றால் விபத்து தேதியில் பாலீசி எங்களிடம் இல்லை. 07.04.2021 முதல் 06.04.2022 வரை பாலீசி எங்களிடம் தான் இருந்தது என்றாலும் இந்த வழக்கிற்காக நான் பாலீசி இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. இழப்பீடு கொடுக்கும் பொறுப்பிலிருந்து தவிர்ப்பதற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால்

சரியல்ல. 1வது எதிர்மனுதாரர் வாகனத்திற்கு எங்களிடம் 12.05.2009 to 11.05.2010 வரை எங்களிடம் இருந்தது.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.